தனிப்பிரதி - ரூ. 20/-

ஆண்டு சந்தா- ரூ. 200/-

# முத்தமிழ் நேசன்

மே 2023

மலர் 2 இதழ் 13

இனிக்கும் இலக்கிய இதழ்



‘மே தினத்தை

வரவேற்றுப் பாடிய முதல் கவிஞர்

## தமிழ்ஒளி’



# உழைப்பு தருமாம் உயர்வு



வியர்வைச் சிந்தி விருப்புடன் உழைக்க
உயரும் வெற்றிகள் உலகில் –அயராது
இளமையில் உழைத்து இமயம் தொட்டால்
வளரும் வசந்தம் வாழ்விலே.

இளமையில் உழைப்பை இனிதெனப் பழக்க
வளமையும் வசந்தமும் வசமாகி –வளரும்
சோம்பல் தவிர்த்துச் சோர்வுகள் தகர்க்க
மேம்படும் வாழ்வும் புவியிலே

-முனைவர் தாழை இரா.உதயநேசன்

# முத்தமிழ் நேசன்

## இனிக்கும் இலக்கிய இதழ்

மே 2023 மலர் 2 இதழ் 12

**நிறுவனர்**

**தாழை இரா.உதயநேசன்**

**ஆசிரியர்**

பாரதி சந்திரன்

**ஆசிரியர் குழு**

ஜோ. சம்பத்குமார்

மு. தனஞ்செழியன்

எ.பாவலன்

த. பரிமளா

**கௌரவ ஆலோசகர்:**

கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம்

**வடிவமைப்பு**

ம.சேவியர்

**அச்சு**

M.S ஆப்செட் ராயப்பேட்டை



**அலுவலக முகவரி**

முத்தமிழ் நேசன்

எண்:10, முதல் தெரு,ஸ்ரீராமபுரம்

ஆம்பூர் – 635 802

திருப்பத்தூர் மாவட்டம்


## பொருளடக்கம்


**ரகசியத்தின் ரகசியம்**

கா.அமீர்ஜான்.

**விண்ணில் அல்ல**
**மண்ணில் உள்ளது சொர்க்கம் !**

கவிஞர் இரா .இரவி !

**பாவம் அந்த நிழல்**

கவிஞர் கவியரசன்.

**சுதந்திரம்**

செ.இலட்சுமணக்குமார்

**வெயிலோடு விளையாடி...**

கவிஞர் பட்டிக்குடிக்காடு இரா.கோவிந்தராசு

**இருளைத் தகர்த்து ஒளியில் நில்....**

நவ.கிருஷ்ணவேணி

**காலச் சுவடுகள்**

**வா.. வா.. வசந்தமே..**

ஓசூர் மணிமேகலை

**கண்ணிலே அன்பிருந்தால்**

Dr ஜலீலா முஸம்மில.

**சிறுகதை போந்தாக்கோழி**

சுந்தரிமணியன்

**கட்டுரை**

பாரதிசந்திரன்

**அப்பாக்களாலான இவ்வுலகு**

பொன்.குமார்

**கவிதைகள்**

**மே தினத்தை வரவேற்றுப் பாடிய**
**முதல் கவிஞர் தமிழ்ஒளி**

மு.தனஞ்செழியன்

**ஹைக்கூ**

கவிதா பிருத்வி


இதழுக்குப் படைப்புகளை அனுப்ப விரும்பும் படைப்பாளிகள்,
யுனிகோட் (unicode) எழுத்துருவில் மட்டுமே தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும்.
படைப்புகளை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி:

mutamilnesan2022@gmail.com

தலையங்கம்

# பயணம் தொடர்கிறது

நேசம் மிக்க வணக்கம். திறனாய்வாளர் பேராசிரியர் கா. பஞ்சாங்கம் அவர்களுக்கும், எழுத்தாளர் சுரேஷ் குமார இந்திரஜித் அவர்களுக்கும் மா. அரங்கநாதன் இலக்கிய விருது வழங்கப்பட்டுள்ளன. இதே போன்று சரியான திறமை உடையவர்களை நோக்கி விருதுகள் செல்வது தமிழ் இலக்கிய வெளியில் ஆரோக்கியமாகவே இருக்கிறது. விருது பெற்ற தமிழ்ச் சான்றோர்களை 'முத்தமிழ் நேசன்' இதழும் பாராட்டி வணங்கி மகிழ்கிறது.

மே தினத்தில் ,12 மணி நேர வேலைத் திட்டம் திரும்பப் பெறப்படுவதாகத் தமிழக அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்தைக் கொண்டு வந்திருக்க வேண்டிய அவசியமில்லை எனினும் மகிழ்ச்சி. பன்னாட்டு, இந்நாட்டு பெரு நிறுவனக் குழுமங்கள் பல வீட்டிலிருந்தே வேலை என்னும் திட்டத்தில் தம் பணியாளர்களைக் குறைந்தது 15 மணி நேரம் வேலை வாங்கிக் கொள்கிறது. இதே போல், மாற்று வழிகளைத் தேடிப் பெருமுதலாளிகள் கைகளில் சாட்டை எடுக்க இனி தொடங்குவார்கள். தோழர் சிங்காரவேலர் முதன் முதலில் வீறு கொண்டு கொண்டாடிய மே நாள் கொண்டாட்டத்தின் நூற்றாண்டாக இவ்வாண்டு அமைந்துள்ளது. தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அரசுகளும், பெருமுதலாளிகளும் செயல்பட்டால் தான் சமூக மேம்பாடு சாத்தியப்படும்.

இம்மாத இதழிலிருந்து புதிய ஆசிரியர் குழு பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்றோம். இதற்கு முன்னதாக இருந்த இதழாசிரியர்களின் பெரும் துணையுடன் தமிழ் இதழியல் வரலாற்றில் 'முத்தமிழ் நேசனைத்' தலையாய இடத்தில் அமர வைக்க முயற்சிக்கிறோம். தொடர்ந்து பல்லாயிரம் எழுத்தாளர்களை ஒன்றிணைப்பதும், நம்மை நாமே தரப் படுத்திக் கொண்டு, தமிழ் இலக்கியத்தை உயர்த்துவதுமான நம் பயணம், தமிழ்மாமணி தாழை.இரா. உதயநேசன் அவர்களின் வழிநடத்தலோடு தொடர்கிறது. பயணிப்போமா?



இங்ஙனம்,

**பாரதிசந்திரன்**

# அனைவர்க்கும் உலகத் தொழிலாளர் தின நல்வாழ்த்துக்கள்



# ரகசியத்தின் ரகசியம்

பனித்துளி நழுவி
நீர்த்துப் போனதில் தெரியவில்லை.
பிரபஞ்ச ரகசியம்

நிலம் விழும் முன்
அறிய முயன்று தெரியும் முன்
விழுந்து நசுங்கி
சிதறிப் போனது மழைத்துளி...

பூமியைக்
கிளறிப் பார்க்கையில்
குப்பையென வெளிப்படுகிறது
யார் யாரோடுடையதான
கழிவுகளின் ரகசியம்

வெளியைப் பார்க்க
கதவற்று இருக்கிறதில்
தேட வேண்டியதில்லை சாவி
எனினும்
புரியவில்லை விரிந்தது ஏனென்று...

மிதக்கும்
ஏதேனுமொருக் கோளில்
இருக்கக் கூடுமென நினைக்க
திறக்கும்
சாவியை எங்கே தேடுவது?

சூட்சமம் தெரிய
நுழைய நுழைய அகப்படாமல் நீள்கிறது
ரகசியத்தின்
குகையற்ற விதானம்...

**–கா.அமீர்ஜான்.**

**திருநின்றவூர்**



# விண்ணில் அல்ல மண்ணில் உள்ளது சொர்க்கம் !

முடியாது என்று முடங்காதே !
முடியும் என்றே முயன்றிடு !

தெரியாது என்று தயங்காதே !
தெரிந்திடு நன்றே அறிந்திடு !

வருமென்று காத்திருக்காதே !
வாய்ப்பைத் தேடி சென்றிடு !

பிறந்தோம் என்பதற்காக வாழாதே !
பிறந்தது சாதிப்பதற்கு உணர்ந்திடு !

சராசரியாகக் காலம் கழிக்காதே !
சாதனை நிகழ்த்திச் சாதித்திடு !

காலத்தை வீணாய் கழிக்காதே !
காலம் மேலானது தெரிந்திடு !

அறிவுரை ஏற்காமல் இருக்காதே !
அறிவுரை ஏற்று நடந்திடு !

பெரியவர்களை மதிக்காமல் இருக்காதே !
பெரியவர்களை மதித்து நடந்திடு !

அவநம்பிக்கையோடு இருக்காதே !
அகத்தில் நம்பிக்கை பெற்றிடு !

தோல்வி கிடைத்தால் வருந்தாதே !
தோல்விக்குத் தோல்வி கொடுத்திடு !

வெற்றி தூரமென்று நினைக்காதே !
வெற்றி உன்னருகில் அறிந்திடு !

என்றும் சோம்பேறியாக இருக்காதே !
என்றும் சுறுசுறுப்பாக இருந்திடு !

ஓய்வு எடுக்க நினைக்காதே !
ஓய்வுக்கு ஓய்வு அளித்திடு !


நாளையென்று நாட்களைத் தள்ளாதே !
நாளை என்ன ? இன்றே முடித்திடு !

பேசிடக் கூச்சம் கொள்ளாதே !
பேசி நன்மைகளைப் பெற்றிடு !

உன் வாழ்க்கை உந்தன் கையில் உள்ளது !
விண்ணில் அல்ல மண்ணில் உள்ளது சொர்க்கம்

**–கவிஞர் இரா .இரவி !**
**மதுரை**

# பாவம் அந்த நிழல்



ஒரு சித்திரை மாதத்து நடுநிசி
நடை பயணம் அது.

ஆள் அரவமற்ற ஒத்தையடி பாதையில்
ஒற்றை ஆள் என்று சொல்வதற்கு இல்லாமல்
நில ஒளியில்
நிழலே துணையாய் ...

நடக்கையிலும்,
சற்று நின்று ஓய்வு எடுக்கையிலும்,
மூத்திரம் கழிக்கையிலுமே,
நம்பிக்கைகுரிய பாத்திரமாய் விலகாது விழிப்போடு
உடன் நிற்கும் உறுதியாய் நிழல் ...

அத்தை வீட்டின் படி ஏறிய சந்தோசம்
விசாரிப்போடு வீட்டில் கிடத்தி
தூங்கச் சொன்னவள்
விளக்கை அணைத்து விரட்டி அடித்தாள்.
ஒட்டி உறவாடிய நிழலை
எட்டி உதைத்தது போல் ...
இப்போது
தனிமையை உணர்கிறேன் நான்.
மீதி இரவுகள் தனிமையில் தவிக்கப் போகிறது.
பாவம் அந்த நிழலும்.

- **கவிஞர் கவியரசன்.**
**கடம்பத்தூர்**

# சுதந்திரம்



அமைதியை தேடுகிறோம்
அச்சம் விலகாத
மனதின் சுதந்திரம்

ஆதிக்க வெறியகலாத
அடக்கு முறையில்
உறங்கும் சுதந்திரம்

இறைவனை வேறுவே
இதயங்களைக் கல்லாக்
இருளில் சுதந்திரம்

ஈன்றெடுத்தவள் ஏக்கம்
ஈரம் கசியும்
விழிகளில் சுதந்திரம்

உள்ளதை கூறாமல்
உள்ளொன்று வைத்து
புறங்கூறும் சுதந்திரம்

ஊக்கத்தோடு தொடரும்
உழைப்பைச் சுரண்டும்
ஊழல் சுதந்திரம்

எல்லோர்க்கும் எல்லாம்
கிடைப்பதாய் கூறும்
பொய்மை சுதந்திரம்

ஏழைகள் வீட்டில்
ஏகாந்தமாய் விளையாடும்
வறுமை சுதந்திரம்

ஐம்பூதமும் விற்கப்பட்டது
லாபம் தொடர்ந்தது
விற்பனை சுதந்திரம்

ஒற்றை விரல்
சனநாயகம் சிறைப்பட்டது
பணநாயக சுதந்திரம்

ஓதிடும் கல்வி
வியாபாரமாய் மாறியது
வணிக சுதந்திரம்

ஔடதங்கள் விற்பனைக்கு
பலியாகும் மனிதன்
மருந்தியல் சுதந்திரம்

**செ.இலட்சுமணக்குமார்**
**ஈரோடு**




வெயிலோடு விளையாடி
வியர்வை துளிச்சோட்ட
வெட்ட வெளியில் கம்பி
டயர் ஓட்டிய காலம்
நினைத்தாலே நிறைந்திருக்கிறதே
நினைவுகள்.
நீண்டு வளர்ந்த மரக்கிளைகள்
இரண்டுக்கு நடுவில்
ஊஞ்சல் கட்டி ஆடிய ஆட்டமெல்லாம்
அசைப்போடுதே இதயம்.
வெளுத்து வாங்கிய வெயிலிலும்
அந்த மரக்கிளைகள் அசையும் போது
மெதுவாய் தவழ்ந்த தென்றலும்
அதனுடன் சேர்ந்து கொள்கிறதே.
வெயிலோடு விளையாடி அருவியிலே
குளிக்கையிலே அதன் சுகமே சுகம்.

**- ஜெயசித்ரா அமிர்தராஜா**

வெயிலோடு விளையாடி
விதவிதமா பாட்டுப்பாடி
விளையாடி மகிழ்ந்தது.
விநோத மகிழ்ச்சிதானே
பயில்கின்ற பள்ளியிலும்
பறந்தமணற் பரப்பிலும்
வயல்காட்டு வரப்புமேலும்
வட்ட குளத்துமேட்டிலும்
குயில்போலே பாட்டுபாடி
மயில்போலே ஆட்டமாடி
ஒயிலாக நாங்களுமங்கே
ஓடி விளையாண்டோமே.
பள்ளியில படிக்கும்போது
துள்ளிக் குதித்தோமுங்க.
கள்ளிச்செடி நிழலிலேயும்
களப்பாறி மகிழ்ந்தோமுங்க.
விளையாடும் பருவத்தில
வெயில்சுட்டா தெரியாதுங்க.
களைப்பேதும் அறியாதந்த
கன்னிப்பருவ வயசுதாங்க

**கவிஞர் பட்டிக்குடிக்காடு இரா.கோவிந்தராசு**

# இருளைத் தகர்த்து ஒளியில் நீல்....


உன்னைச் சுற்றிய கருமைப்
போர்வை
ஒன்றல்ல ஆயிரம் உணர்ந்திடு
அவற்றை
வெட்டிப் பேச்சும் விமர்சனப்
பார்வையும்
தூர விலக்கிடு துணிந்து
செயற்படு
நம்பிக்கை முயற்சி நேர்மையே
வெற்றி
நாளும் உழைப்பை நலமாய்ப்
பற்றி
உயர்வைத் தேடிட இருளைத்
தகர்த்து
நீயே ஒளியாய் ஒளிர்வாய்
ஒருநாள்

**நவ. கிருஷ்ணவேணி**

தென்றலும் குளுமையும்
தென்பொதிகை மலையோரம்
மலர் வாசம்
துள்ளிடும் தூறலால்
மகிழ்ச்சி பொங்கிடும்
தென்னம்பூ வாசத்தில்
தெவிட்டாத தேனிசையும்
இணைந்திட்டால் இளைஞர்களின்
களைப்படையா குதூகலம்
தேனிலும் மதுரமாய்
குருவிகள் பாட்டிசைக்கும்
தேனீர்க் குவளையும்
தெம்மாங்கு பாடிடும்
அசைந்தாடும் சரிகைச்
சேலையும் சதிராடும்
மணவாளன் மணவாட்டியோடு
ஒன்றிணைய ஓதிடும்
தென்றலும் குளுமையும்
திகட்டாத தீஞ்சுவையே

**A.D.W.நளினி சாந்தகுமாரி**

**திருநெல்வேலி**



# காலச்
# சு
# வ
# டு
# க
# ள்

கடந்து வந்த பாதைகள் கசப்பானதாகினும்//
படர்ந்துற்று மனதினில் பம்பரமாய் சுழலுது//
தடங்களைத் தந்திட்டு தானழிந்து நின்றாலும்//
படமாக ஆள்மனதில் நினைவுகளை மீட்டுது//
காலங்கள் சொல்லிடும் கதையான சுவடுகள்//
மூலதனமாய் முன்னெடுக்க முழுமூச்சில் நிற்குது//

**–நிவேதா யுகந்தன்**
**பிரித்தானியா**

மாறிடும் காலத்திலும்
மறையாத நினைவுகள்/
நிலையிலா உலகில்
நிலையான சான்றுகள்/
வாழ்ந்த வாழ்க்கையில்
பதிவான பக்கங்கள், /
தடங்கள் பதித்தோரின்
வாழ்வின் சுயசரிதம்/
தனிமனித நெஞ்சங்களில்
அழியாத வடுக்கள்/
முன்னோரின் சரித்திரங்கள்
மறையாத காலச்சுவடுகள்/

**–வனஜா உதயகுமாரன்.**
**நோர்வே**

## சந்தாதாரர்களுக்கு ஓர்
# அறிவிப்பு:

நமது முத்தமிழ் நேசன் இதழ் ஜனவரி–2023 மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையிலாக வெளியிடப்பெறாத காரணத்தால், சந்தாதாரர்கள் அனைவருக்கும் அவர்கள் செலுத்திய சந்தாக் காலத்திலிருந்து நான்கு மாதங்கள் நீட்டித்து முத்தமிழ் நேசன் இதழ் அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்

# வா..
# வா..
# வசந்தமே..

வருக.. வருக.. வசந்தமே! மகிழ்வைத்
தருக.. தருக.. தடையில் லாமலே !
மலர்கள் பூத்து மணமும் வீசும்
புலரும் காலைப் பொலிவைக் கூட்டும்!
கிளைகள் எங்கும் கிளைக்கும் தளிர்கள்
இலைகள் வண்ணம் இனிமை சேர்க்கும்!
வளமையூட்டும் வசந்த காலம்
இளவேனில் பருவமாய் இன்ப மூட்டும்!
புல்நுனிப் பனித்துளி பூத்திடும் காலையில்
'நில்'லெனக் கூறிடும் நேர்த்தியின் காட்சியே!
பறவைகள் ஒலியது பரவசம் ஊட்டிடும்!
இறைவனின் திருத்தலம் எங்கணும் பெருவிழா!
சுற்றுலாப் பயணமும் சுகமுடன் செல்லலாம்!
கற்றிடும் அனுபவம் களிப்பினை அளித்திடும்!
வசந்தம் வாழ்வில் வந்திட வேண்டும்!
வசந்த காலம் வழியினைக் காட்டுமே!



**ஓசூர் மணிமேகலை**

# கண்ணிலே அன்பிருந்தால்

கண்ணிலே அன்பிருந்தால்
கதைகளோ மிருதுவாகும்
கருணையின் புரிதலிலே
காயங்களும் ஆறிவிடும்

கல்லான இதயமும்
கரைந்தே போகும்
கரையில்லாக் கடலாய்
களிப்போ பெருகிடும்

சொல்லின் அழகில்
சொர்க்கம் தெரிந்திடும்
சோதியாய் வளர்ந்து
சோகங்கள் துரத்திடும்

தரணியில் வழிந்திடும்
தாட்சண்யம் வாழ்கவே
தண்மையில் குளிர்ந்திடும்
தயாளகுணம் வளர்கவே

**-Dr ஜலீலா முஸம்மில.**
**ஏறாவூர் இலங்கை**



**சிறுகதை :**



**–சுந்தரிமணியன்**

புதூர்

பக்கத்து டேபிளில் இருந்த சுமதி

“இந்தப் போந்தாக்கோழி பண்ற டார்ச்சர் தாங்கமுடியலைடி”

என்றாள். “என்னாச்சு” என்ற சுதாவிற்கு வயது முப்பது இருக்கும். சுருட்டை முடியுடன் சிவப்பாக இருந்தாள்.

“சென்னையில் நடக்கின்ற மீட்டிங்கிற்கு என்னைப் போகச் சொல்றாங்க. நாம எதுக்குப் போகனும்? நாம டெம்ப்ரவரி ஸ்டாப்தானே. இதைத்தானே அந்தப் போந்தாக்கோழி எப்பப் பார்த்தாலும் சொல்லி நம்மை மட்டம் தட்டும். இதுக்கு மட்டும் அந்தப் போந்தாக் கோழிக்கு டெம்ப்ரவரி ஸ்டாப்புன்னு தெரியலையாமா ”

“சரி விடு. போக முடியலைனா சூப்ரெண்ட் கிட்ட சொல்லி வேற யாரையாவது அனுப்பச் சொல்லுவோம்.” என்றாள் சுதா.

“அடிப் போடி இவளே. நீ சொன்னவுடன் அந்தக் கொக்கு நோக்காடு வந்த கோழி உடனே அது போகப்போகுது. இல்ல வேற யாராயாச்சும் அனுப்பிட்டுத்தான் மறுவேலை பார்க்கும் பாரு” என்று முகத்தைச் சுளித்தாள் சுமதி.

“நீ சொல்வதும் சரிதான். இங்க வேலை பார்க்க மட்டும்தான் நாம வேணும். அதிகாரம் பூரா அவங்க கையில. இந்த

வேலை பார்க்கிறதுக்கு நான் காலேஜ்லயே இருந்திருக்கலாம்" என்றாள்.

"இதைத் தானே நான் முன்னாடியே சொன்னேன்" என்றாள் சுமதி. சுதா கல்லூரியில் தட்டச்சராகப் பணியாற்றியவள். அரசு வேலை என்றவுடன் வீட்டில் சொன்னார்கள் என இந்த டெம்ப்ரவரி வேலையில் வந்து சேர்ந்தாள். வேலையை நிரந்தரம் செய்வார்கள் என எதிர்பார்த்தாள். ஆனால் எதுவும் நடக்கவில்லை. நாட்கள் போனதுதான் மிச்சம். இருந்த வேலையையும் விட்டாயிற்று. வேறு வழியில்லாமல் வேலைக்கு வந்து கொண்டிருந்தாள்.

போந்தாக்கோழி என்று எங்களால் திருநாமம் சூட்டப்பட்ட சசிகலா அக்காவிற்கு வயது ஐம்பது இருக்கும். இளம்வயதிலேயே விதவை ஆனவர். அவரது நிலைகருதியே அவரின் மேல் எனக்குப் பரிதாபமும் அன்பும் ஏற்பட்டது. ஆனால் சசி அக்காவிற்கு யாராவது ஆபிசில் நல்ல சேலை கட்டினாலோ, நகை புதிதாகப் போட்டிருந்தாலோ பொறுக்கமுடியாது அவர்களுக்குக் கெடுதல் செய்யும் குணம் இருந்தது. தன்னைத் தவிர யாராவது சம்பள உயர்வு பெற்றார்கள் என்றால் தாங்கமுடியாது. தனக்குக் கீழ் வேலைபார்க்கும் டெம்ப்ரவரி ஆட்களுக்கு எதுவும் கிடைத்துவிட்டால் தன்னை மதிக்கமாட்டார்கள் என்ற எண்ணமிருந்தது. இதனால்தான் சுமதிக்கும் எனக்கும் சசி அக்காவைப் பார்த்தால் பிடிப்பதில்லை. ஆபிசில் வேலையே பார்க்காமல் ஊதிப் போயிருக்கும் அவளது உடம்பினைப் பார்த்து சுமதி போந்தாக்கோழி எனப் பெயர் வைத்தாள். அது அவரது செயலுக்குப் பொருத்தமாகவும் இருந்தது.

இருபத்தெட்டு வயதிலேயே விதவையான சசி அக்காவிற்கு தன்னைப் போல மற்றவர்கள் துன்பப்படக்கூடாது என்ற எண்ணம்தானே வரவேண்டும். ஆனால் இவர் மட்டும் எப்படி மற்றவர்கள் துன்பப்படுவதைப் பார்த்து ரசிக்கிறார் என்று நான் யோசிப்பதும் உண்டு. அதற்கான காரணத்தை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஆபிசில் இருக்கும் சூப்ரெண்டு அதற்கு மேல். ஒரு விசயத்தைச் சொல்ல வந்தால் அனாவில் தொடங்கி அஃகனா வரை இழுத்து வளவளவென்று பேசுகிற ரகம். ஏதாவது கேட்கப் போனால் எனக்கும் சுமதிக்கும் போதும் போதும் என்றாகிவிடும்.

"இந்தக் காரியத்தை இவர்களிடம் கேட்பதற்கு நாமே செய்திருக்கலாம்" என்பாள் சுமதி.

அன்றொரு நாள் ஆபிசில் இருந்த பைல் ஒன்று தொலைந்து போனது. சூப்ரெண்டு சொன்னார்கள் என்பதற்காக நானும் சுமதியும் போய்த் தேடுகிறோம். காலையில் தேட ஆரம்பித்து மதியம் தொடங்கிவிட்டது. நாங்கள் அலுத்துப் போய் சாப்பிட இரண்டு மணிக்கு லன்ச் டேபிளில் அமர்ந்துவிட்டோம். அங்கு வந்த ஜீனியர் அஸிஸ்டெண்ட் தமிழரசன் என்னை வம்பிழுத்தார்.

"என்ன பைல் கிடைத்ததா?" என்றார்.

"இல்லண்ணே. நாங்களும் காலையிலிருந்து தேடுறோம். பைல் எங்க போச்சுன்னே தெரியல" என்றேன் நான்.

"பைல் ரெக்ககட்டிப் பறந்து போயிருக்கும் பாரு. நீங்க ஒழுங்காத் தேடியிருக்க மாட்டிங்க"என்றார். உடனே சுமதி,

"ஒரு பைல ஒழுங்கா வச்சுக்க முடியல. இதுல பேச்சு வேறயா" என்றாள் கிண்டலாக.

“பைல பெருச்சாளி தூக்கிட்டுப் போயிருச்சோ என்னவோ” என்றார் மெதுவாக.

“ஏது உங்க அறையில உள்ள குண்டுப்பெருச்சாளியா” என்றாள் சுமதி. உடனே கொல்லென்று எல்லோர் முகத்திலும் சிரிப்பலை அரும்பியது. சிரித்து முடித்தவுடன்,

“இருக்கலாம்” என்றார் தமிழரசன். அப்போதே எனக்கும் சுமதிக்கும் யார் செய்த வேலையென்பது புரிந்தது.

“என்ன உள்குத்தா” என்றேன் நான்.

“ஆமா” என்றார் தமிழரசன்.

அவரவர் இடத்துக்குச் சென்றவுடன் சுமதி என் காதில் வந்து “இந்தப் போந்தாக்கோழி ஏன் இந்த வேலையெல்லாம் செய்யுது. அதுக்கு வேற வேலையில்லையா” என்றாள்.

“பிடிக்கலைனா அப்புறம் எப்படிப் பழிவாங்குறது” என்றேன் நான்.

“டிடி வந்தா சூப்ரெண்டல்ல வைவாரு. பாவம்பா சூப்ரெண்டு” என்றாள் சுமதி.

“ஆமாம் நாம என்ன செய்யுறது. உஷா அக்கா இருக்கும்போது அது பீரோல்ல தேடவும் முடியாது. அதுவா பைல எடுத்துக்குடுத்தாத்தான் உண்டு. இல்ல அது இல்லாதப்ப சூப்ரெண்டு சுதாரிச்சு எடுக்கனும்” என்றேன் நான்.

எங்களது வேலையை முடித்துக் கொண்டு நானும் சுமதியும் வீட்டிற்குக் கிளம்பினோம். மறுநாள் காலையில் சுமதி அவசரமாக வந்து காதைக்கடித்தாள்.

“விசயம் கேள்விப்பட்டியா. பைலத் தொலைச்சிட்டாங்கன்னு சூப்ரெண்டுக்கு டிடி மெமோ கொடுத்துட்டாராம். பாவம். எல்லாம் இந்தப் போந்தாக்கோழி செய்த வேலை. அத ஒரு நாளைக்கு வச்சுக்கிறேன்” என்று பல்லைக் கடித்தாள் சுமதி.

“விடு அத திருத்தமுடியாது. அது செய்ற தவறுக்குத் தான் இப்படிக் கடவுள் தண்டிச்சிருக்காரு. நாம எதுவும் சொல்ல வேண்டாம். அதுவா ஒரு நாளைக்குத் திருந்தும்” என்றேன் நான்.

## நிறுவனர் செய்தி:

அனைவருக்கும் மகிழ்வான வணக்கம். “முத்தமிழ்நேசன்’ இதழ் இம்மாதத்திலிருந்து புதிய ஆசிரியர் குழுவுடன் இயங்கத் தொடங்கியுள்ளது. எப்போதும் போல் நமது வாசகர்கள் இணைந்து செயலாற்றித் தமிழின் அளவில்லாத இலக்கிய நயங்களை உள்வாங்கத் தொடங்கலாம். நாம் தமிழமுதம் பருகி உயிர் நீட்டிப்போம்.

இம்மாத இதழிலிருந்து ஆசிரியராகப் பாரதிசந்திரன் அவர்களும், ஆசிரியர் குழுவில் ஜோ.சம்பத்குமார், மு.தனஞ்செழியன், எ.பாவலன், த.பரிமளா ஆகியோர்களும், கௌரவ ஆலோசகராகக் கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம் அவர்களும் செம்மையாகப் பணியாற்ற உள்ளனர் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்ஙனம்,

**தாழை.இரா.உதயநேசன்**

கட்டுரை

# “தாழை இரா. உதயநேசனின்”
## இதழியல் பணிகள்



வளமிக்கத் தமிழுக்குப் பல்வேறு நிலைகளில் தம் பங்களிப்பைச் செய்கின்றவர்கள் தொடர்ந்து செய்து கொண்டே தான் இருக்கின்றனர். அவர்களின் பணி மிகச் சரியாக இலக்கிய வரலாற்றில் பதிவாகி அடுத்த தலைமுறைக்கு அது சென்றடைகிறதா? என்பது தான் அவசியமாகின்றது. அவ்வகையில் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் தொடர்ந்து வளர்ச்சி கண்டு வரும் தமிழ் இலக்கியத்தின் வரலாற்றில், பதிவு செய்யப்பட வேண்டிய ஆளுமைகளில் மிக முக்கியமானவர் தாழை இரா. உதயநேசன் ஆவார்.

கவிதை, கட்டுரை, சிறுகதை எனப் பல்லாற்றல் திறனைப் பல நூல்கள் வழி வெளிப்படுத்தித் தமிழின் வளர்ச்சியில் ஒரு மைல் கல்லாக விளங்கிக் கொண்டு, அடுத்தடுத்து இணையத்தில் பல எழுத்தாளர்களை ஒன்றிணைத்துப் பல ஆக்கபூர்வமான பணிகளைச் செய்து கொண்டிருப்பதோடு, தமிழ்த் தொலைக்காட்சி ஒன்றை இலக்கியத்திற்காகவே நடத்தியும், உலகமக்கள் தமிழைக் கற்கவும், ஆழங்கால்படவும், “அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகம்” என்னும் சிறப்புமிக்கப் பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தும், இன்ன பல செயல்கள் செய்தும் தொடர்ந்து தமிழ்ப் பணி ஆற்றி வருகின்றார்.

தற்பொழுது, இன்னும் ஒரு மணி மகுடமாக ‘முத்தமிழ் நேசன்’ எனும் இலக்கிய மாத இதழையும் தொடங்கி நடத்தி வருகிறார். அவரின் இத்தகு தமிழ் இதழியல் பணி குறித்துப் பதிவு செய்வது இன்றியமையாததாகிறது.

“இனிக்கும் இலக்கிய இதழ்’ எனும் தாரக மந்திரத்தினைக் கொண்டு இவ்விதழ் பிப்–மாதம் 2022–ல் தொடங்கப்பட்டுத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. வணிக நோக்கும் சார்புத் தன்மையும், மேதமைப் பண்புடனும் வந்து கொண்டிருக்கும் இக்கால வணிக இலக்கிய இதழ்களுக்கு மத்தியில், எளிமையையும், நவீனத் தன்மையையும், சார்புத் தன்மையில்லாதும், வணிக நோக்கமிலாது வந்து கொண்டிருப்பது “முத்தமிழ் நேசன்” இதழின் சிறப்புகளாகும்.

இரசனையை மிகுத்து எழுதத் தூண்டும் படைப்புக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன. பல புதிய எழுத்தாளர்களின் தரமிக்கப் படைப்புக்கள்

ஒவ்வொரு இதழிலும் காண முடிகின்றது. பக்க வடிவமைப்பும், அச்சு எழுத்துக்களின் வசீகரமும், படைப்புகளின் மேன்மைத் தன்மையும் பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷமாக இவ்விதழ்களை உருவாக்கியிருக்கின்றன.

இலக்கிய இதழ் ஒவ்வொரு வாசகனையும் ஒரு படி உயர்த்தி, அவனுக்குள் வேதியியல் மாற்றத்தினைப் போல் ஏதாவது ஒன்றை ஏற்படுத்த வேண்டும். இச்செயல்பாட்டினை இவ்விதழ்கள் சரிவரச் செய்கின்றன என்பதற்கு உதாரணமாக ஒரு கவிதையை இங்கு எடுத்துக் காட்டலாம். தாழையாரின் ஹைக்கூ கவிதை அதுவாகும். அக்கவிதை,

"விடியலில் மழை
பாத்திரத்தில் நிரம்புகிறது
சொட்டு சொட்டாய் ஓசை"

என்பதாகும். இக்கவிதைக்குள் "ஓசை" எனும் சொல் கவிதையில், காட்சிக்கு அப்பாற்பட்ட ஏற்புடை முரணாக (Acceptance paradox) வந்திருக்கிறது. ஆனால், அக்காட்சியினுடாக இச்சொல்லின் பொருளும் இயைபே.

மழையை இரசித்தலின் காட்சி மனதிற்குள் விரிகிறது. அங்கு சொட்டு சொட்டாய் நீர்தானே சேகரமாகிறது. "நீர்" எனும் சொல் வந்திருந்தால் எதார்த்தவியல் கவிதையாக(Realist poetry) மலர்ந்திருக்கும். இங்கு நீரும் நிரம்புகிறது. அதன் நிரம்புதலின் "ஓசையும்" கேட்கிறது. ஓசை கேட்குமே ஒழிய, அதெப்படி நிரம்பும்? ஆனால், கவிஞனுக்கு நிரம்பும். வாசகனுக்கு இதுவே பிரமிப்பையும், உற்சாகத்தையும் தரும். விடியலின் சுகமோடு, மழையின் சுகத்தையும் இணைந்து, அதன் ஓசையும் உள்ளீடு செய்து ஐம்புலன்களையும் ஒன்று சேர்த்து இக்கவிதை இரசிக்க விட்டிருக்கிறது எனலாம்.

ஆசிரியர் த. அமுதா அவர்களின் தலையங்கம் சமூகப் பிரச்சனைகளை அலசி ஆராய்ந்து நடுநிலையை உயர்த்திப் பிடித்திருக்கிறது. "கல்வி நிலையங்களின் அவலப் போக்கு" குறித்து ஆகஸ்டு 2022-ல் எழுதும் பொழுது, 'கல்வி நிறுவனங்களில் பெண் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு இல்லையென்றால், இதை நாடு என்று சொல்லிக் கொள்வதில் எந்தப் பொருளுமில்லை' எனச் சாடுகின்றார். எழுத்துக்களில் உண்மைத் தன்மையும், இனம் காட்டி அழைத்துச் செல்லும் போக்கும் இதழ் ஆசிரியரின் சிறப்பை உணர்த்துகின்றன. இவை,

"எரிதழல் எங்கும் பாரடா
எரியுது வாழ்வெனக் கூறடா"
நாடுகள் வளைய சுற்றிவந்தும்
நலங்காண மனதில்லை-வலிக்குதடா

எனும் தாழையாரின் வரிகளுக்கு ஏற்ப அமைந்துள்ளன.

உலகளாவிய இலக்கியச் செய்திகள் ஒவ்வொரு இதழிலும் இடம் பெறுகின்றன. அவை புகைப்படங்களுடன் நேரில் பார்ப்பதைப் போன்ற வர்ணனைகளுடன் வெளி வருகின்றன. உலகளாவிய தமிழ் முன்னெடுப்புக்களை ஆர்வலர்கள் அறிந்து கொள்ளவும், இவை உதவுகின்றன.

கட்டுரை இலக்கியத்தின் வரையறைகளைத் தாங்கி இவ்விதழில் கட்டுரைகள் வெளியிடப் பெறுகின்றன. "கவியரசு கண்ணதாசன்" குறித்தான சூர்யாவின் கட்டுரையில் கவியரசை ஆழமாக அறிந்து கொள்ள முடிகின்றது அவரின் பாடல்களை இரசனையுடன் விளக்கியிருப்பது சிறப்பாகும். முனைவர் ஜோ.சம்பத் அவர்களின் 'பிரமளின்

பார்வையில் மௌனி” எனும் கட்டுரை மௌனியின் வேறொரு பரிணாமத்தை விளக்குகிறது. தத்துவப் போக்கற்ற கதை கூறும் மௌனியைப் பிரமளின் பார்வையில் வெளிப்படுத்தியிருந்த பாங்கு அழகாகும்.

நூல் குறித்த திறனாய்வுகளும், அரசு மற்றும் அரசு சாரா இலக்கிய விழாக்கள், தமிழகத்தில் நடந்த முறை குறித்த இலக்கியச் செய்திகள் இதழைச் சமப்படுத்துகின்றன. சிறுகதைகள், கவிதைகள் குறித்தத் திறனாய்வுக் கட்டுரைகளும் அதிகம் வெளியிடப்படுகின்றன.

இவ்விதழ்களில், நவீனக் கவிதைகள் தரம் மிக்கவையானவைகளாகக் காணப்படுகின்றன. சுசீலாமூர்த்தியின் கவிதை, பெண்ணின் மனவுணர்வுகளின் வலியை அழகாகக் கூறுகிறது. அக்கவிதை,

“இமையோரத்தின்
சிறுமுடியொன்று
முத்தம் வேண்டி வதைக்கிறது...
சகலமும் மௌனித்த இரவில்.

காலக் கம்பளமேறி
நடுவானில் பெயரில்லாத
ஏதோ ஒன்றாய் ஆகி விடும் முன்
உயிர் வருடும்
உன் குரலைக் கேட்கின்றேன்...
பெருங்காதலாகிறது வாழ்வு”

என்பதாகும். கவிஞர் தாமரையின் “மல்லிப்பூ வச்சி வச்சி வாடுதே” எனும் “வெந்து தணிந்தது காடு” திரைப்படப் பாடலைப் போன்ற ஏக்கமும் ஆசையும் இக்கவிதையில் வெளிப்பட்டு நிற்கின்றதை உணர முடிகின்றது. இதே போன்று ஆண் மனதில் எழும் மனவுணர்வு வெளிப்பாடாகத் தாழை இரா.உதயநேசன் அவர்களின் கவிதை எழுதப்பட்டிருக்கின்றது. அக்கவிதையானது,

“ஒரே முறையாவது
உனது அன்பினைக்
காட்டு.
ஓராயிரம் முறை
மரித்து
உயிர்த்தெழுவேன்.”

என்பதாகும். காதலுணர்வுகளை வார்த்தைகளுக்குள் கொண்டு வந்து வெளிப்படுத்தும் நயம் கவிதையின் அழகை மிகுக்கிறது.

இவ்வாறு, தாழையாரின் இதழான “முத்தமிழ் நேசன்” இதழ் தொடர்ந்து இலக்கியப் பணியைச் செய்கிறது. அதோடு, புதிய எழுத்தாளர்களைத் தமிழுக்கு அறிமுகம் செய்து வைக்கிறது. படைப்புக்களின் தரத்தை மேம்படுத்தி தமிழ் இலக்கியம் முன்னேறப் பாடுபடுகிறது. முத்தமிழ் நேசனின் இதழியல் பணி காலத்தால் பதிவு செய்யப்பட வேண்டிய முக்கியமான ஒன்றாகும். இதனை முன்னெடுக்கும்“தாழை இரா.உதயநேசன்” அவர்களின் இப்பணிகளைத் தமிழுலகம் வியந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது.




**பாரதிசந்திரன்**
[முனைவர் செ. சு. நா. சந்திரசேகரன்]
தமிழ்ப்பேராசிரியர்



# அப்பாக்களாலான இவ்வுலகு



தம் படைப்புத்திறனை வியக்கும் வாசகர்களின் ஏற்புக்கோட்பாட்டை, ஒரு படைப்பாளர் உற்று நோக்கி அதனைக் கட்டுரையாக மாற்றினால் எவ்வாறு இருக்கும் என்பதை முதன்முதலாக முயற்சித்திருக்கும் முயற்சியே இக்கட்டுரை. கவிஞர் பொன்.குமார் அவர்களின் சமீபத்திய நூல் "அப்பா என்பது வெறும் சொல் அல்ல". அந்த நூலின் வாசக எதிர்வினைகளை ஒருசேரக் கண்டும், கவிதையின் உணர்வுகளையும் இக்கட்டுரை வெளிப்படுத்தும்.

-பொன்.குமார்
சேலம்

அப்பாக்கள் குறித்த கவிதைகளை வாசிக்கும் போதெல்லாம் ஓர் ஈர்ப்பு ஏற்படும். ஓர் இனம்புரியாத உணர்வு உண்டாகும். தொகுப்புகளில் இருந்தும் முகநூலில் இருந்தும் கவிதைகளை, கருத்துகளைத் தொகுத்து "அப்பா என்பது வெறும் சொல் அல்ல" என்னும் ஒரு கட்டுரையாக எழுதினேன். சேலம் பாவலர் எழுஞாயிறு கடிதம் மூலம் பாராட்டினார். முகநூலிலும் பதிவிட்டேன். நெகிழ்ச்சியுடன் சிலர் கருத்தளித்தனர். இருப்பினும் அப்பா கவிதைகள் குறித்த தேடல் தொடங்கியது. அப்பாக்கள் குறித்த கவிதைகளும் எழுதி வந்தேன்.

சற்றும் எதிர்பாராத வேளையில் எல்லாமுமாக இருந்த என் அப்பா காலமானார். என் அப்பாவை முன்வைத்தே

கவிதைகள் எழுதி ஒரு தொகுப்பாக்க ஒரு திட்டமிட்டேன். சில கவிதைகளும் எழுதினேன். பின்னாளில் எல்லா அப்பாக்களுமான கவிதையாக எழுதினேன். எல்லா அப்பாக்களும் ஒன்று தானே?

அப்பாக்கள் குறித்து எழுதப்பட்டவைகளை உடனுக்குடன் முகநூலிலும் பதிவிட்டேன். முகநூலிலும் அதற்கான கருத்துரைகளும் கிடைத்தன.

அப்பா..
உங்களுக்கு நல்ல சாவு
ஒரு நாளில் இறந்து விட்டார் என்கின்றனர்
உற்றார், உறவினர், ஊரார்.
எங்களுக்கு அல்லவா
பல நாள் வேதனை..

என்றொரு கவிதை எழுதினேன். "உற்றார், உறவினருக்கு நம் வலி என்ன தெரியும்? எதிர்பாரா மரணம் மீள முடியா வலி தரும். எனவே திடீர் சாவு நல்ல சாவே அல்ல. நம் முட்டாள் முன்னோர்களின் வார்த்தைகள் அப்படி" எனக் கோபமாகவே கருத்துரைத்துள்ளார் க. பாலாஜி. ' வேதனை என்பது பட்டவர்க்கே தெரியும்" என்கிறார் காரிப்பட்டி தங்கராஜ். "உண்மை" என ஒரே வார்த்தையில் தெரிவித்துள்ளார் கவிஞர் சி. கலைவாணி."வேதனைதான்" என்று பகிர்ந்துள்ளார் கவிஞர் வலம்புரி லேனா. எழுத்தாளர் ஹரணியோ "மறுபடியும் சொல்கிறேன் குமார். அப்பா சாகவில்லை. மானுட ஆன்மா மரணம் எய்தாது. மறுபடியும் பிறந்திருக்கும் மேனியைக் கொல்வாய் என்பது போல அப்பாவின் மேனி குமார் ஆகிவிட்டது. கவலையை விடுங்கள் நண்பா.. எழுதுங்கள்" என ஆறுதலளித்து எழுதத் தூண்டியுள்ளார்.

இறப்புச் சான்றிதழாக
இன்று கையில்
எண்பத்திரண்டு வருடங்கள்
இருந்த அப்பா

என்றொரு கவிதை. இக்கவிதையை வாசித்த கவிஞர் தில்லை நடராஜன்"பிரமிப்பு. இதயத்தில் உன் ஆக்கிரமிப்பு. அப்பா நீ"என்று பிரித்துள்ளார். மனது வலிக்கிறது' என்கிறார் கவிஞர் கோவை உமாமகேஸ்வரி. புலவர் வேலுவின் மகனான செந்தில் ' நம் சேலத்து படைப்பாளி. கற்றதும் பெற்றதும் சுஜாதா பாராட்டியவர் அண்ணன் பொன் குமார் அவர்களின் இக்கவிதை என்ன சொல்வது? கல்லுக்குள் ஒளிந்திருக்கும் சிற்பம் போல சொல்லுக்குள் ஒளிந்திருக்கும் சிற்பம்" என்று தெரிவித்துள்ளார்.

அப்பா
உங்கள் உடலுக்கு
தீ மூட்டிய போது
மெல்ல எரிந்து
சாம்பலானோம்

என்னும் கவிதையை வாசித்த எழுத்தாளர் ஹரணி

எரிந்த சாம்பலில்
உயிர்ப்போம் நாங்கள்
பிள்ளைகள்

என ஒரு கவிதையாகவே எழுதி நம்பிக்கையூட்டியுள்ளார்.

கவிஞர் மீராவின் மகளான கவிஞர் செல்மா மீராவால் அருமை எனப் பாராட்டப்பட்ட கவிதை

குழந்தைகள்
அப்பா என்று
அழைத்த போதிலும்

அப்பாவை
அப்பா என்று
அழைக்கும் போது
நானுமொரு குழந்தை

அப்பாவை அப்பா என அழைக்கும் போது ஒரு குழந்தையாகவே உணர முடிகிறது.

அதிகம் படிக்காதவர்
அப்பா
ஆனால்
நல்ல ஆசிரியர்

என்பதை வாசித்த கவிஞர் சுகபாலா "அடுத்த தொகுப்பு தயாரா?" என தயார் படுத்தியுள்ளார். "சிறப்பு" என்கிறார் ஆண்டிமகன் குபேரன். எழுத்தாளர் ரவீந்திரபாரதியோ "அருமை" என பாராட்டியுள்ளார்.

அதிகம் பேசாமல்
அனைத்தையும்
செயலிலேயே காட்டும்
ஆச்சரியம்
அப்பா

என்னும் கவிதையை ஒற்றைச் சொல்லில் "சிறப்பு" என பாராட்டியவர் கவிஞர் செல்மா மீரா.

பிள்ளைகள்
நிமிர்ந்து வாழ
பல இடங்களில்
குனிந்து வாழ்ந்தவர்
அப்பா

என்னும் கவிதையை வாசித்த எழுத்தாளர் ஹரணி"சத்திய தரிசனம்" என்று கருத்துரைத்துள்ளார். ' அருமை" என்று வாழ்த்தியுள்ளார் கவிஞர் மேமன் கவி. "மரியாதை தெரிந்த பிள்ளை" என்று தெரிவித்துள்ளார் எழுத்தாளர் ரவீந்திர பாரதி.

முகத்தில்
முறுக்கிய மீசை
வைத்திருந்தாலும்
மனத்தளவில்
ஒரு குழந்தையே
அப்பா

என்பதற்கான கருத்தாக"மீசை வைத்த குழந்தை" என்று தெரிவித்துள்ளார் கவிஞர் கோ. வசந்த குமாரன்.

அப்பா என்பவருக்குள்
அம்மாவும் இருக்கிறார்
ஆசிரியரும் இருக்கிறார்

என்று எழுதப்பட்ட கவிதையை 'நண்பனும்' இருக்கிறார் என தொடர்ந்துள்ளார் கவிஞர் சுமதி ரகு. "அருமை' என்கிறார் எழுத்தாளர் ரவீந்திர பாரதி." இதையே கவிதையாக எழுதலாமே' என்ற ஏற்காடு சீனிவாசனிடம் "எப்படி' என்று கேள்வி எழுப்பியதற்கு அம்மாவும் ஆசானும் அப்பாவில் அடக்கம் என்று மாற்றி எழுதியுள்ளார். இரண்டுக்கும் அதிகம் வேறுபாடு இருப்பதாக தெரியவில்லை.



உருவத்தில்
வேறுபட்டாலும்
உள்ளத்தில்
ஒரே மாதிரிதான்
அப்பாக்கள்

என்பதை “சிறப்பு” என்றார் கவிஞர் செல்மா மீரா. கவிஞர் சு. கேசவன் “உள்ளன்பில் சிறப்பு' என்றார். “சூப்பர்” என்று கவிஞர் லசியும் “அப்பா.. அப்பப்பா.” என கவிஞர் பெருமாளும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

எழுத்தாளர் ஹரணியால் “மிகச்சரி” என்று ஏற்றுக் கொள்ளப்படும் கவிதை

அணுவளவும்
அன்பை
வெளியில் காட்டத் தெரியாத
அப்பாவி
அப்பா

தொடர்ந்து “அப்பாவின் அன்பு ஆரம்பத்தில் தெரிவதில்லை. பிள்ளை வளர்ந்து பெரியவனாகும் போது அன்பு தெரிகிறது பிள்ளைகளுக்கு” என்கிறார் சிவகுமார் கோலப்பா.

பிள்ளைகள்
பேரும் புகழோடும்
வாழும் போது
பார்த்து மகிழ
உயிருடன் இல்லை
பாடுபட்ட அப்பா

என்பதை வாசித்த கவிஞர் சு. கேசவன் “வேதனை” என்றும் “கொடுமை” என இரா. முத்து பாண்டியும் “ அவர் அருளாகவே அவர்தாள் வணங்கி” என பத்மகிரியும் தங்கள் எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஒரு போதும்
தன்னை
வெளியில் காட்டிக்கொள்ளாத
ஆணிவேர்
அப்பா

என்னும் கவிதையை “சிறப்பு” என சிலாகித்துள்ளார் கவிஞர் ஆத்மா ஜீவ் முனைவர் இரா. முத்துபாண்டி, கவிஞர் செல்மா மீரா, கவிஞர் சு. கேசவன் ஆகிய மூவரும் ஒரே மாதிரி “உண்மை” என ஒப்புக்கொண்டுள்ளனர்.

நான்
நகல்
அசல்
அப்பா

என்னும் கவிதைக்கு நல்லதொரு வரவேற்பு இருந்தது. கவிஞர் சுகபாலா போல்' அடுத்த தொகுப்பு அப்பாவைப் பற்றிய தொகுப்பு. அப்படித்தானே ஐயா. வாழ்த்துகள் என்று வாழ்த்தியுள்ளார் கவிஞர் துஷ்யந்த் சரவணராஜ். ஆனால் தாத்தாவின் நகல் அப்பாவோ?' என ஒரு கேள்வியை எழுப்பியுள்ளார் கவிஞர் பரிணாமன். “அருமை.. அருமை” என பாராட்டியுள்ளார் கவிஞர் ஜெயகுமார். “சிறப்பு” என்கிறார் கவிஞர் செல்மா மீரா.“அருமையான

கவிதை” என்று தெரிவித்துள்ளார் எழுத்தாளர் சந்துரு. “அப்பப்பா” என வியந்துள்ளார் கவிஞர் மயில்வாகனன் ரவீந்திரன். “அருமை”. உங்கள் கவிதையால் இப்படி உதித்தது.

அசல்
நகலாவது
நகல்

அசலாவது
இந்த
வைராக்கியப் பயணத்தில்
மூலமும்
வந்து கொண்டே
இருக்கிறது
யாதொரு உருவமற்று

என ஒரு கவிதையே எழுதியுள்ளார் கவிஞர் விநாயக மூர்த்தி. “இப்போ நீங்கள் அசல்” என்று நானும் ஓர் அப்பா என்பதை நினைவுப்படுத்தியுள்ளார். “மிகச் சிறந்த வரிகள்”. அப்பா மகன். வாழ்த்துகள் என்கிறார் ஓவியக் கவிஞர் ஆ.உமாபதி.

குலசாமியைக்
கும்பிடுகிறோம்...
கூடவே இருந்த
குலசாமி
அப்பா

என்னும் கவிதையை வாசித்த கவிஞர் எழுத்தாளர் எஸ். பாலசுப்பிரமணி “தோளில் தூக்கி உட்கார வைத்து உலகைக் காட்டிய குலசாமி அவர்தானே?” என ஒரு கேள்வியை எழுப்பி கவிதையை உறுதிச் செய்துள்ளார்.

உதடுகளால்
பேசியதை விட
உள்ளத்தால்
அதிகம் பேசியவர்
அப்பா

என்பதை வாசித்த கவிஞர் சு. கேசவன் “உண்மை” என ஒப்புக்கொண்டுள்ளார். “Exactly” என்கிறார் கவிஞர் எஸ். பாலசுப்பிரமணி. “செயல்களாலும்” பேசியவர் என்பது கவிஞர் பத்மகிரியின் கருத்து.

அப்பா என்பது
சொல் அல்ல
வரலாறு

என்று எழுதினேன். “அருமை” என்று எழுதி வழிமொழிந்துள்ளார் கவிஞர் செல்மா மீரா. இவரின் தந்தையே கவிஞர் மீரா.


அப்பா
ஒரு நடமாடும்
ஏ. டி. எம்.
ஆனால்
பணம் இல்லையென்று
பதில் அளித்ததேயில்லை

என்பதை வாசித்த கவிஞர் கானப்ரியன் “Yes True” என்கிறார். “அருமை. அருமை. பின் நெம்பரும் தேவையில்லை” என்கிறார் கவிஞர் தங்கம் மூர்த்தி. “அப்பா....எனக்கு கனவு காண கற்றுக் கொடுத்தார் இருவரும் ஒன்றாய் தான் தூங்குவோம் அவர் குறட்டையின் வழியாக என் கனவுகளுக்கு பின்னணி இசையையும் சேர்ப்பார்“என அப்பாவுடனான தன் அனுபவத்தைப் பகிர்ந்துள்ளார் முகிலன் செட்டி.“ஆஹா...” என்று ஆமோதித்துள்ளார் சு. மாதவன்.

அப்பா
அதிகம் உறங்கி
பார்த்ததில்லை
இறந்த பின்புதான்
இப்படி படுத்துக் கிடக்கிறார்

என்றொரு கவிதைக்கு ஏராளமான கருத்துக்கள்.” சேர்த்து வைத்த தூக்கம் அது’ என்கிறார் எழுத்தாளர் லா.சரா. வின் மகனான எழுத்தாளர் சப்தரிஷி.“உங்க அம்மா தூங்கி நான் பார்த்ததே இல்லை., பார்த்தேன் மகளே பார்த்தேன்” என்னும்

சினிமா பாடலை நினைவுக் கூர்ந்துள்ளார் கவிஞர் நிறைமதி. “சிறப்பு” என ஒற்றைச் சொல்லில் கூறியுள்ளார் கவிஞர் கோனூர் வைரமணி. “இதற்கு எப்படி விருப்பக்குறி இடுவது? நெஞ்சைப் பிரிகிறது சோகம்”என வருத்தத்தை வெளிப்படுத்தியுள்ளார் கவிஞர் ஜெயபால் தங்கவேல். “நெகிழ்ச்சி” என்பது கவிஞர் இரா. இரவியின் கருத்து. “வார்த்தைகள் இல்லை” என இரண்டு வார்த்தைகளில் கூறி கவலையை வெளிப்படுத்தியுள்ளார்.“நெஞ்சம் தொடும் வரிகள்‘ என்கிறார் கவிஞர் ஆறுமுகம் சன்னப்பன்.” ஆஹா எளிமை அருமை நண்பரே” என்கிறார் கவிஞர் கானப்ரியன். “அருமை” என கவிஞர் வைகை சுரேஷ் அவர்களும் கவிஞர் நர்மதாவும் “கிளாசிக் வரிகள்” என கவிஞர் வினாயக மூர்த்தியும் கருத்தினைக் கூறியுள்ளனர். “நெஞ்சைச் சுடும் கவிதை. ஆறாவடு. அப்பாவின் சுவடுகளில் நீறுபூத்த நெருப்பாய் பயணம்” என்கிறார் எழுத்தாளர் ராமமூர்த்தி.



பிள்ளைகளின்
ஆசைகளை மட்டுமே
தன் ஆசையாகக் கொண்ட
தன்னலமற்றவர்
அப்பா

என்னும் கவிதைக்கு “தன்னலமற்றவர்” என கவிஞர் வலம்புரி லேனாவும் “ரசனையின் ஒளி” என கவிஞர் செல்மா மீராவும் கருத்துரைத்துள்ளனர்.

கவனித்தபடியேயுள்ளது
அப்பா இல்லாத
சாய்வு நாற்காலி

என்றொரு கவிதை எழுதி இருந்தேன். இதற்கு “அருமையான ஒன்று” என்று எழுதியுள்ளார் கவிஞர் வெற்றி விடியல் சீனிவாசன். எழுத்தாளர் மேமன் கவி “அருமை” என ஆமோதித்துள்ளார். கவிஞர் துரை. நந்தகுமார் மனம் திறந்து “பிரமாதம்” என பாராட்டியுள்ளார்.

சுமைதாங்கிக் கல்
சொல்ல கேள்வி பட்டிருக்கிறோம்
அப்பா
நீங்கள்
நாங்கள் கண்ட
நடமாடும்
சுமை தாங்கிக் கல்

என்பதை வாசித்து “உண்மை” என ஒப்புக்கொண்டுள்ளார் கவிஞர் சு. கேசவன். “அருமை” என்பது முனைவர் இரா. முத்துபாண்டியனின் கருத்து. தந்தை– மகன்

சுமைதாங்கி– கல்
என ஒப்பிட்டுள்ளார் அண்ணாவி.
வயது கூடுகையில்
வெளிப்படுகிறார்
எனக்குள்ளிருக்கும்
அப்பா

என்னும் கவிதையை வாசித்து “வாழ்க்கையின் வெளிப்பாடு” என்கிறார்

கவிஞர் பொன். முருகன்.“நிசம்”என்கிறார் எழுத்தாளர் கண்மணி குணசேகரன்.

பிள்ளைகளை
உயர்த்திக் காட்டுவதில்
அஸ்திவாரம்
அப்பா

என்னும் கவிதைக்கு எழுத்தாளர் ஹரணி“அவையத்து முந்தியிருப்பச் செயல் எனும் தொடரின் ஒரே பொருள் அப்பா” என்கிறார். உண்மை. பிள்ளைகள் இதை உணர்ந்திருந்தால் முதியோர் இல்லம் மூடப்பட்டிருக்கும் என்கிறார் கவிஞர் சு.கேசவன். அஸ்திவாரங்களும் அவர்களே. கதாநாயகர்களும் அவர்களே’ என்கிறார் எழுத்தாளர் மு. அம்சா.

என் அப்பாவிற்கும்
என் அப்பாவின் அப்பாவிற்கும்
உள்ள இடைவெளியும்
எனக்கும்
என் அப்பாவிற்கும்
உள்ள இடைவெளியும் ஒன்றல்ல.
இடைவெளிகள் வேறுபட்டாலும்
“அப்பா” க்கள் வேறல்ல.

என்பது குறித்த கவிஞர் சு.கேசவனின் கருத்து உண்மை .

கவிஞர் செல்மா மீராவால்“அருமை” என கூறப்பட்ட கவிதை

பிள்ளைகளுக்கு
போதுமான உடைகள்
வாங்கித் தந்த அப்பாவிற்கு
போதுமானதாக இருந்தன
இரண்டே செட் உடைகள்.

பிள்ளைகளை
வழியனுப்பி விட்டு
பின்னால் நின்று பார்த்து
பெருமைப்படுவர்
அப்பா

என்னும் கவிதையை வாசித்த எழுத்தாளர் ராமமூர்த்தி “அப்பா” எப்பொழுதும் தியாகத்திரியாகவே ஒளிவிடுகிறார்” என்கிறார். “ஆமாம்” என ஒற்றை வார்த்தையில் எழுத்தாளர் ஹரணி கூறியுள்ளார்.” “ஆமாங்க.” எனத் தொடங்கினாலும் நிறைய அப்பாக்கள் கடைசி வரை பிள்ளைகளோடு தான்’ என்கிறார் கவிஞர் சுமதி ரகு.

அப்பா மரணம்
அடைவதில்லை.
பிள்ளைகளாக
பிறப்பெடுக்கிறார்கள்
என்பதற்கு எழுத்தாளர் சப்தரிஷி’
அப்பாக்கள் மரணம்
அடைவதில்லை.
பிள்ளைகள்
பெற்றெடுக்கிறார்கள்

என மாற்றி எழுதியுள்ளார்.“செம” என்கிறார் கவிஞர் வானவன் மாலதி. “அருமை” என்கின்றனர் எழுத்தாளர்கள் ஜனநேசன, ரவீந்திர பாரதி. “பேரன்... பேத்திகளாக..” என்று தெரிவித்து அப்பாக்கள் பிறந்து கொண்டே இருப்பார்கள் என்கிறார்.

அப்பாவைப் பற்றி எழுதிக் கொண்டே இருக்கலாம். அப்பாவின் அன்பைப்போல் எல்லையற்றது. அப்பாவின் பாசத்தைப் போல் ஆழமானது. அப்பாவின் தியாகத்தைப் போல் முடிவில்லாதது..

# காலச்சுவடுகள்

## எனும் தலைப்பில் நமது குழுமத்தில் “ ஆசையில் ஆறு”

### கவிதைப் போட்டி – 69 அதில் எழுதிய கவிஞர்களின் கவிதைகள்

மனதிலே எண்ணில் அடங்காத நினைவுகளே
இழப்பின் வலிகள் என்றுமே மறக்கமுடியாதவை
இதயத்தில் ஏற்பட்ட ஆறாத வடுக்கள்
உறவுகளின் நம்பிக்கைத் துரோகத்தில் வீழ்ந்தமை
தனிமையில் எவரும் இல்லாமல் தவித்தமை
காலச்சுவடுகள் என்றும் வாழ்க்கையில் அழியாதவையே

**ஷாமினி தவசீலன்.**
**இலண்டன்**

காலடித் தடங்கள் உடனே
மறையும்/
காலச் சுவடுகள் என்றும் நிலைக்கும்/
ஆலச் சிவப்பில் அடித்தளம் பதிக்கும்/
ஞாலம் சிறந்து நன்மை புரியும்/
பாலம் அமைத்து நாளைக் கடக்கும்/
மூலம் ஆகி மூச்சில் கலக்கும்//

**சியாமளா பாலகிருஷ்ணன்.**

திரும்பிப் பார்க்கிறேன் கடந்துவிட்ட காலங்களை
சொல்லித் தந்திருக்கிறது பற்பல அனுபவங்களை
ஒவ்வொன்றும் ஒருவிதம் வாழ்க்கைப் பாதையில்
தெரிந்தது துரோகங்கள் முதுகில் குத்துகையில்
எதிர்ப்புகளை எட்டித்தள்ளி எழுந்திடுவேன் ஏற்றமுடன்
உச்சரிக்கப்படும் எனது பெயரும் பெருமையுடன்

**- நாகை குமரன்**

காலச்சுவடுகள் மூதாதையர்
பதிந்து வைத்தவை
கலாச்சாரம் கொள்கையாவும்
வழிவகுத்து
நிறைவேற்றினார்கள்
பேற்றோர்களிடம் கற்றோம்
அப்படியே வாழ்ந்தோம்
பிள்ளைகள் இப்படி
நல்லுபதேசங்கள்
ஏற்கமறுக்கின்றனர்
கூடிவாழ்வது இல்லம்
விரிவடைந்து விழுதுகளாய் காட்சியளிக்கும்
இன்றைக்கு
ஒற்றுமையின்றி
கூட்டுக்குடும்பம்
சிதைந்துகிடக்கிறது

**- எம் சந்திரகாந்தா.**
**சென்னை**

மனிதனாய்ப் பிறந்து மண்ணிலே தவழ்ந்து
இனியொரு பிறப்பையும் எடுத்திட நினைத்தோம்
வாழ்ந்திடும் போதினில் வையகம் சிறந்திட
ஏழ்மை வந்தாலும் ஏற்றிடும் கருமங்கள்
மற்றவர் மனதில் மகிழ்வாய் நிலைத்திட
காலச் சுவடுகளாய்க் காலமும் வாழ்வோமே

**- ஈச்சிலம்பற்று மதிபாலசிங்கம்**

காலச்சுவடுகள் எப்பொழுதும்
நினைவுகளின் புகைப்படங்களே
பூங்காற்று வீசும் போதெல்லாம்
இளைப்பாறுமே
உல்லாசமாக்கும் புல்லாங்குழலும்
உடைத்துவிடும் உளியுமாகுமே
தவறுகளை மன்னித்தால்
நிம்மதி சொந்தமே
அழகான அற்புதமான
பிறவி இதுவே
தினந்தோறும் புதிதாகப்
பிறந்து வாழ்வோமே...

**- மாலதி ஆறுமுகம்**

காலச்சுவடுகள் மெதுவாய் கரைந்தே போக
மாறிடும் சரித்திரம் தீங்காய் முடியலாம்
கல்மேல் செதுக்கியவையும்
காலத்தால் அழியலாம்
இருந்தும் இவற்றைக் காப்பாற்ற வேண்டுமே
வருங்காலச் சந்ததிகள் இவற்றை அறிந்திட
பாதுகாத்திடலாம் நவீன தொழில் நுட்பத்திலே

**சிவராமன் கிருஷ்ணபிள்ளை**
**சுவீஸ்**

கடற்கரை மணலில்
தொலைத்த காலடிச்சுவடுகளை
தேடித் திரிவதே
பயனில் முயற்சியே
வாழ்வில் நிகழும்
துன்ப நிகழ்வுகளை
நாளும் நினைப்பதால்
ஏது நன்மையே
காலச் சுவடுகளில்
பதியும் முன்னரே
கடந்து போகவே
கிடந்து ஏங்குதே

**ஐ . அசோக்குமார்.**
**கொழும்பு .**

# ‘மே தினத்தை வரவேற்றுப் பாடிய முதல் கவிஞர் தமிழ்ஒளி’

**- மு.தனஞ்செழியன்**



“தமிழ்ஒளியின் கவிதைகள் தனித்தன்மை வாய்ந்தவை. தொடக்கக் காலத்தில் திராவிடர் கழகத்தைச் சார்ந்தவராக இருந்தபோதிலும் பொதுவுடைமைக் கொள்கைகளை உயிர் மூச்சாகக் கொண்டிருந்தார். உலகத் தொழிலாளர்களின் உரிமை நாளான மே தினத்தை வரவேற்றுப் பாடினார். 1949 ஆம் ஆண்டில் “புதுவைத் தொழிலாளிக்கு கோவைத் தொழிலாளியின் கடிதம்” என்னும் கவிதை எழுதினார். மக்கள் வாழ்வு உயர இலக்கியங்கள் பயன்படவேண்டும் என்பதுதான் அவர் கொள்கை.“ஒரு கவிஞன் வாழ்ந்ததற்கு அடையாளமே அவனுடைய படைப்புகள்தாம்” என்று எழுதினார். நிலை பெற்ற சிலை, வீராயி, மே தின ரோஜா ஆகிய மூன்று காவியங்களும் தலித்து மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் தலித்து மக்களின் விடுதலை அவர்களின் முன்னேற்றம் ஆகியவற்றை விவரிக்கின்றன”. எனத் தமிழ்ஒளி குறித்து விக்கிப்பீடியா கூறும்.

தமுஎகச கருத்தரங்கில் சிகரம் ச.செந்தில்நாதன் அவர்கள் ஆற்றிய உரையில் தமிழ்ஒளி குறித்துக் கூறும்போது, ‘தமிழனே நான் உலகின் சொந்தக்காரன்; தனிமுறையில் நான் உனக்கு புதிய சொத்து‘ என்று கவிஞர் தமிழ்ஒளி சொல்லி ஆரம்பிக்கிறார். அவருடைய கவிதைகளில் ஏராளமான இந்தித் திணிப்பிற்கான எதிர்ப்பு இருக்கிறது. வடமொழிக்கு எதிரான ஒரு எதிர்ப்பு இருப்பதைப் பார்க்கலாம். இந்தியை எதிர்த்துப் பேராசிரியர் கணேசன் ஒரு பாடலைச் சொன்னார். தமிழ் ஒளியின் வேறொரு பாடலும் இருக்கிறது.

“இந்தியை எதிர்த்து நில்
எவன் வரினும் எதிர்த்து நில்
நந்தி போல் மறிக்கும் மூட நாய்களை

எதிர்த்து நில்”

அவருக்கு எவ்வளவு கோபம் வருகிறது! மூட நாய்களை எதிர்த்து நில் என்று சொல்லுகிறார் தமிழ்ஒளி. வீராயி காப்பியத்தில் சாதி குறித்துக் கடுமையாக எழுதுகிற போது என்ன ஆவேசம் இருந்ததோ, அந்த ஆவேசமே 'நந்தி போல் மறிக்கும் மூட நாய்களை எதிர்த்து நில்' என்று சொல்லும்போதும் இருந்தது.

“நேரிலே எதிர்த்து நில் நேர்மையால் எதிர்த்து நில்

போரிலே புறங்கொடா
முற்போக்கால் எதிர்த்து நில்”

ஆக பல வகையில் ஒரு வித்தியாசமான ஒரு கவிஞராக இருந்திருக்கிறார் தமிழ் ஒளி. ஆழ்ந்த வாசிப்பு அறிவும் இருந்திருக்கிறது. அமைப்பு ரீதியாகவும் செய்ல்பட்டு இருக்கிறார். அது மட்டுமல்ல அவர் காலத்திலே நடந்த தொழிலாளர்களுடைய போராட்டங்களில் எல்லாம் கலந்து கொண்டிருக்கிறார். அந்தப் போராட்டங்கள் குறித்தும் கவிதை எழுதி இருக்கிறார். அது மிகவும் முக்கியமானது. அவர் களத்திலும் நின்றிருக்கிறார். களத்திலே நின்றதோடு அந்தக் களத்திலே தனக்குக் கிடைத்த அனுபவங்களைக் கவிதையாகவும் மாற்றி இருக்கிறார்.

இவ்வளவு சிறப்பு மிக்க தமிழ்ஒளி ஒரு சிறந்த விமர்சகர் என்பதும் கவனிக்கத்தக்கது. விமர்சன உலகில் அவர் எழுதுகிற போதும், கட்டுரைகள் எழுதுகிற போதும் யாருக்காக எழுதுகிறோம். யாரைப் பற்றி எழுதுகிறோம் என்பதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் மிக நேர்மையாக எழுதுகிறார். தொ.மு.சி. ரகுநாதன் இடதுசாரிகளால், பொதுவுடமைவாதிகளால் மிகவும் போற்றப்படுகிற ஒரு எழுத்தாளர். சிறுகதை மன்னன் என்று அழைக்கப்படுகிற புதுமைப்பித்தன், எதார்த்தவாதத்தை முன்னெடுத்தவர் என்ற முறையில் நாம் அனைவரும் அவரைப் போற்றிப் பாராட்டுகிறோம். இந்த ரகுநாதனையும், புதுமைப்பித்தனையுமே கேள்வி கேட்கிறார் தமிழ்ஒளி. அதாவது அவரே முற்போக்கு எழுத்தாளராக இருந்து கொண்டு, அவரே கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து கொண்டு ரகுநாதனையும் கேள்வி கேட்கிறார்; புதுமைப்பித்தனையும் கேள்வி கேட்கிறார். அந்தக் கட்டுரைகளை எல்லாம் படிக்கும் போது நமக்கு ஆச்சரியமாக இருக்கும். புதுமைப்பித்தனுடைய கவிதைகளைத் தொகுத்து வெளியே கொண்டுவந்தவர் ரகுநநதன். புதுமைப்பித்தனுடைய கவிதைகளை தமிழ் ஒளி ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ் ஒளி பெரும்பாலும் கவிதையில் யாப்பு இலக்கண மரபு சார்ந்த மரபு கவிஞராகவே இருக்கிறார். அவரால் இந்த கவிதைகளை எல்லாம் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இப்படி தற்கால இலக்கியம் பற்றி மட்டுமல்ல அவருக்கு திருக்குறள், சிலப்பதிகாரம் முதலிய நூல்களிலும் ஆழ்ந்த அறிவும் பிடிப்பும் இருக்கிறது. அந்த அளவிற்கான ஆழ்ந்த அறிவு அந்நாட்களில் எத்தனை பேருக்கு இருந்தது என்று சொல்ல முடியாது.

குறள் பற்றி எழுதுகிற போது பொதுவாக பரிமேலழகருடைய உரையைப் போற்றிச் சொல்வார்கள். பரிமேலழகருடைய உரை தவறு என்கிறார் தமிழ்ஒளி. திருக்குறளுக்குப் பரிமேலழகர் கொடுத்திருக்கிற உரை என்பது திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் திருவள்ளுவருடைய திருக்குறளுக்கான கருத்து,

அவர் எப்படி இயற்கையோடும்

வாழ்க்கையோடும் இணைத்து இருந்தார் என்பதையெல்லாம் புறக்கணித்துவிட்டு, பிற்காலத்தில் ஏற்பட்ட வைதீகத்தினுடைய செல்வாக்கை திருக்குறள் மீது திணித்துப் பரிமேலழகர் உரை எழுதியிருக்கிறார் என்று தமிழ் ஒளி கூறுகிறார்.

சிலப்பதிகாரம் பற்றி மாதவி காவியமும் எழுதியிருக்கிறார். சிலப்பதிகாரம் பற்றிய அவ்வளவு நுட்பமான அறிவு அவருக்கு இருக்கிறது. மாதவி மீது பெரிய அளவில் மதிப்பு வைத்து மாதவி காவியம் எழுதியிருக்கிறார். தமிழ் ஒளி ஒன்பது காவியங்கள் எழுதியிருக்கிறார்.

தம்முடைய வரலாறு என்பது பாரதி, பாரதிதாசன், பட்டுக்கோட்டையோடு முடியக்கூடியது அல்ல. இன்னும் பல கவிஞர்கள் பல எழுத்தாளர்கள் இலக்கியவாதிகள் நம்முடைய அமைப்பிலே தோன்றுவார்கள் தோன்றிக் கொண்டே இருப்பார்கள். அவர்கள் மற்ற எழுத்தாளர்களை எல்லாம் தோற்கடிப்பார்கள் அதுதான் மிக முக்கியமானது. காலதாமதமானாலும் தமிழ் ஒளி தன்னுடைய முயற்சியால், தன்னுடைய உழைப்பால், தன்னுடைய திறமையால்.. தன்னுடய முற்போக்குச் சிந்தனையால் எத்தனையோ கவிஞர்களைத் தோற்கடித்து இன்றைக்கு நம்மிடம் அங்கீகாரம் பெற்று இருக்கிறார். அவருடைய பெருமையைப் பேச வேண்டும் என்று சொன்னால், அவருடைய நூல்களைப் பற்றிப் பேச வேண்டும் என்றால் அதைத் தனித்தனியாகப் பேச வேண்டும். ஒரு அறிமுகம் என்ற வகையில் கவிஞர் தமிழ் ஒளியைப் பற்றிய நல்லதொரு அறிமுகத்தை வழங்கியதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். என்பார்.

# ஹைக்கூ

புதையுண்ட நகரமாக
தோண்ட தோண்ட
எழுகிறது கீழடி!

கற்காலம் பேசும்
இக்கால மக்களிடம்
தொல்லியல் அருங்காட்சியகம்!

பட்டை தீட்டிய வாள்கள்
ராஜாவின் உடைகள்
அரண்மனையில் காட்சிக்கு!

பழங்கால நூலகத்தில்
சித்தம் பேசுகிறது
ஓலைச்சுவடிகள்!



**கவிதா பிருத்வி**
**தஞ்சை**



அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகம்
பதிவு எண்: 202201061554843 / 9275709 IN -USA
வடஅமெரிக்கா
பழங்குடியினர் மொழியியல் மற்றும் பண்பாடு - மாணவர்கள் 2023
திருமதி திருமகள் சிறிபத்மநாதன்
பிரித்தானியா
திருமதி அருணா ரகுராமன்
அமெரிக்கா
திருமதி இரதி கமலநாதன்
சுவிட்சர்லாந்து
முனைவர் ச. தனலட்சுமி
தமிழ்நாடு
திருமதி கோ. மோகனா
தமிழ்நாடு
திருமதி சீத்தா ஜெயதீபன்
சுவிட்சர்லாந்து
இந்தியா முகவரி:
எண்: 10, முதல் தெரு,
ஸ்ரீராமபுரம்,
ஆம்பூர் – 635802
திருப்பத்தூர் மாவட்டம்
தமிழ்நாடு – இந்தியா
தொடர்புக்கு:
செல்: 91596 98466
99760 25731
தொலைபேசி:
04174 249192
www.americamutamiluniversity.org




அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகம்
பதிவு எண்: 202201061554843 / 9275709 IN -USA
வடஅமெரிக்கா
பல்கலைக்கழகப் பேராசிரியர்கள்
பேராசிரியர் - முனைவர் கா.ந. கல்யாணசுந்தரம்
தன்முனைக் கவிதைகள் - பயிற்சியும் ஆய்வறிக்கையும்
பேராசிரியர் - முனைவர் கு. முதற்பாவலர்
தமிழ் இலக்கணமும் பயிற்சியும்
பேராசிரியர் - முனைவர் நா. தீபாராணி
பழங்குடியினரின் மொழியியல் மற்றும் பண்பாடு
பல்கலைக்கழக வேந்தர்
முனைவர் இரா. உதயநேசன்
பதிவாளர்
முனைவர் மோ. பாட்டழகன்
கல்வித் தலைவர்
முனைவர் ஜோ. சம்பத்குமார்




அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகம்
பதிவு எண்: 202201061554843 / 9275709 IN -USA
வடஅமெரிக்கா
மரபிலக்கணம் இரண்டாமாண்டு - மாணவர்கள் 2023
திருமதி திருமகள் சிறிபத்மநாதன்
பிரித்தானியா
திருமதி இரதி கமலநாதன்
சுவிட்சர்லாந்து
திருமதி கெங்கா ஸ்டான்லி
ஜெர்மனி
திருமதி சுகுணா சுதாகரன்
பிரித்தானியா
திருமதி நிர்மலா பரராசசேகரம்
சுவிட்சர்லாந்து
திருமதி இராஜேஸ்வரி சிவராசா
சுவிட்சர்லாந்து
திருமதி சிவகாமச்செல்வி
தமிழ்நாடு
திருமதி அரங்கநாயகி கண்ணன்
தமிழ்நாடு
திருமதி அன்பழகி திருநீலகண்டன்
சுவிட்சர்லாந்து
திருமதி ரஜிதா அரிச்சந்திரன்
இலங்கை
திருமதி விஜயா சோமசுந்தரம்
தமிழ்நாடு
தன்முனைக் கவிதைகள் பயிற்சியும் ஆய்வறிக்கையும் - மாணவர்கள் 2023
திருமதி திருமகள் சிறிபத்மநாதன்
பிரித்தானியா
திரு. ம. ஞானசம்பந்தன்
இலங்கை
திருமதி கோ. மோகனா
தமிழ்நாடு
திருமதி சுமதி ரஞ்சநாதன்
பிரான்ஸ்
திருமதி ரேணுகா பிரதீப் முமார்
இலங்கை
திரு. வை. ரியாஸ் மொஹமட்
இலங்கை
திரு . கிருஷ்ணநாதன்
தமிழ்நாடு




அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகம்
பதிவு எண்: 202201061554843 / 9275709 IN -USA
வடஅமெரிக்கா
மரபிலக்கணப் பட்ய வகுப்பு - முதலாமாண்டு மாணவர்கள் 2023
திருமதி அருணா ரகுராமன்
அமெரிக்கா
திரு. ம. ஞானசம்பந்தன்
இலங்கை
திருமதி சுமதி ரஞ்சநாதன்
பிரான்ஸ்
திருமதி கோ. மோகனா
தமிழ்நாடு
திருமதி செ. அங்கயற்கண்ணி
சுவிட்சர்லாந்து
திருமதி ந. தாமரைச்செல்வி
இலங்கை
திரு. இரா.சி. மோகனதாஸ்
மலேசியா
திரு. வைர. வசீகரன்
இலங்கை
திருமதி நிறைந்தசெல்வி
பிரான்ஸ்
திரு. ஈழவன் தாசன்
தமிழ்நாடு
திரு. இரா. சத்தியநாராயணன்
தமிழ்நாடு
திருமதி ரேணுகா பிரதீப்குமார்
இலங்கை
திருமதி ஜெயபுஸ்பா குணபாலசிங்கம்
பிரான்ஸ்
திருமதி பூங்கோதை ஸ்ரீகரன்
பிரித்தானியா
திருமதி ஜமுனாமலர்
சுவிட்சர்லாந்து
திருமதி சிவசோதி விஜயகுமார்
சுவிட்சர்லாந்து
திருமதி ஜெயந்தி பூரியபாலா
சுவிட்சர்லாந்து
திருமதி இராசரத்தினம் சிவகெங்கா
பிரான்ஸ்
திருமதி சீத்தா ஜெயதீபன்
சுவிட்சர்லாந்து
செல்வி. நிரஞ்சலா சுந்தரலிங்கம்
இலங்கை



# உலகத் தமிழர்களே!

கலை – இலக்கியம் – சமூகவியல் – நாட்டுப்புறவியல்
உள்ளிட்ட
இணைய வழிப் படிப்புகளில்
இணைய வாருங்கள்!

உலக அரங்கில்
தனியாய் ஒரு
உன்னத உலகம்!

தமிழே நமது உயிர் மொழி!– அது
தமிழரின் உயர்வுக்கு ஒரே வழி!

## அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகம்

விபரங்களுக்கு:
www.americamutamiluniversity.org